பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 12 2024 **FRIDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்பதை பிரதிபலிக்கும் வகையில் பிரயாக்ராஜ் மகாகும்பமேளா கொண்டாடப்படவிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பாகிஸ்தான் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்களை விரைந்து விடுவிக்க தூதரக ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. விமான நிலையங்களில் குறைந்த கட்டணத்தில் உணவுப் பொருட்களை வழங்கும் உடான் உணவகம் விரைவில் தொடங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. பிரான்ஸ் நாட்டின் புதிய பிரதமராக திரு. **Francois Bayrou** நியமிக்கப்பட்டுள்ளார்.

5. கத்தார் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் **Arjun Erigaisi** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**>>>><<<<**

ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்பதை பிரதிபலிக்கும் வகையில் மகாகும்பமேளா கொண்டாடப்படவிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் அடுத்த மாதம் 13ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி மாதம் 26ஆம் தேதிவரை நடைபெறவுள்ள மகாகும்பமேளா-வை முன்னிட்டு, 5 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடங்கி வைத்தார்.

அப்போது பேசிய அவர், இந்த திட்டங்களால் பிரயாக்ராஜில் ரயில் மற்றும் சாலை வசதிகள் இணைக்கப்படுவதுடன், கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

மகாகும்பமேளா நிகழ்வு, அனைவரின் கூட்டுமுயற்சியை வெளிப்படுத்துவதாக அமையும் என்றும், கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாக திகழும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முந்தைய காலங்களில் கும்பமேளாவுக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றும் திரு. நரேந்திர மோடி குறை கூறினார்.

**>>>><<<<**

பாகிஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் இரண்டாயிரத்து 639 பேர் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக விடுவிக்கப்பட்டிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், கடந்த பத்தாண்டுகளில் இந்தியா – பாகிஸ்தான் இடையே தூதரக ரீதியிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்பட்டதாக கூறினார்.

இரு நாடுகளும் பரஸ்பரம் தங்கள் நாடுகளில் சிறைகளில் உள்ள மீனவர்களின் விவரங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என கடந்த 2008ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வோராண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாத முதல் தேதியில், இருநாடுகளின் சிறைகளில் உள்ள மீனவர்களின் பட்டியல் பரிமாறிக் கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஜூலை மாத நிலவரப்படி, டாமன் டையூவைச் சேர்ந்த 24 மீனவர்கள் உட்பட 211 இந்திய மீனவர்கள் தற்போது பாகிஸ்தான் சிறைகளில் உள்ளதாகவும், அவர்களையும் விடுவிக்க தூதரக ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

**>>>><<<<**

விமான நிலையங்களில் குறைந்த கட்டணத்தில் உணவுப் பொருட்களை வழங்கக்கூடிய உடான் பயணிகள் உணவகம் விரைவில் தொடங்கப்படும் என்று சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் உள்ள சர்வதேச விமான நிலையம் தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்ததற்கான அடையாளச் சின்னத்தை, புதுதில்லியிலிருந்து காணொலி மூலம் வெளியிட்டு அவர் பேசினார்.

விமான நிலையங்களில் விற்பனை செய்யப்படும் உணவு வகைகள் அதிக விலையில் விற்கப்படும் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் இந்த உணவகங்கள் அமையும் என்று அவர் கூறினார்.

இத்தகைய உணவகம் முதல் முறையாக கொல்கத்தா விமான நிலையத்தில் தொடங்கப்படவிருப்பதாகவும், படிப்படியாக அனைத்து விமான நிலையங்களிலும் விரிவுபடுத்தப்படும் என்றும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

>>>><<<<

கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் பலன் அளிக்கக்கூடிய பிரதமரின் மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ், கடந்த ஏழு ஆண்டுகளில் 3 கோடியே 64 லட்சம் பேர் பயனடைந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி, இத்திட்டத்தின் கீழ், காகிதமில்லா டிஜிட்டல் முறையில் பயனாளிகள் பதிவு செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

இதற்காக, அங்கன்வாடி மற்றும் ஆஷா பணியாளர்களுக்கு மொபைல் செயலி மூலம், பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின் கீழ், கர்ப்பிணிப் பெண்களுக்கு ஆறாயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருவதாகவும் திருமதி. அன்னபூர்ணா தேவி தெரிவித்தார்.

>>>><<<<

இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகே, மூன்று நாள் பயணமாக நாளை மறுநாள் இந்தியா வருகிறார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், இலங்கை அதிபராக பொறுப்பேற்ற பின், திரு. அனுர குமார திசநாயகே முதல் முறையாக இந்தியாவுக்கு வரவிருப்பதாக கூறினார்.

தமது பயணத்தின்போது, இலங்கை அதிபர் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோரை சந்தித்து இருதரப்பு மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தலைநகர் தில்லியில் வர்த்தக நிகழ்ச்சியில் பங்கேற்கும் இலங்கை அதிபர், புத்தகயாவுக்கும் செல்லவிருப்பதாக திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

>>>><<<<

அடுத்த ஆண்டிற்குள் காசநோயை முற்றிலும் ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான தேசிய அளவிலான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல், கடந்த 2015ஆம் ஆண்டில் ஒரு லட்சம் பேருக்கு 237 என்ற அளவில் இருந்த காசநோயாளிகள் எண்ணிக்கை, கடந்த ஆண்டில் 195-ஆக குறைந்துள்ளது என்று கூறினார்.

இது, 17 புள்ளி ஏழு சதவீதம் குறைவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா அமைப்பு காசநோயை வரும் 2030ஆம் ஆண்டுக்குள் ஒழிக்க திட்டமிட்டுள்ள நிலையில், ஐந்தாண்டுகளுக்கு முன்னரே இந்தியாவில் அந்த நோய் இல்லாத நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த நோயால் ஏற்படும் இறப்பு விகிதமும் 21 புள்ளி 7 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

>>>><<<<

உடல் உறுப்புகள் தானம், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், மத்திய அரசு மேற்கொண்டு வரும் விழிப்புணர்வு காரணமாக, அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், கடந்த 2023ஆம் ஆண்டு 18 ஆயிரம் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெற்றிருப்பதாகவும், 16 ஆயிரத்து 542 பேர் உடல் உறுப்புகள் தானம் செய்வதற்கு பதிவு செய்திருப்பதாகவும் கூறினார்.

கடந்த 2018ஆம் ஆண்டு 7 ஆயிரம் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளும், உடல் உறுப்பு தான பதிவுகள் 6 ஆயிரத்து 294ஆகவும் இருந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

அரசு மேற்கொண்ட நவீன வசதிகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் காரணமாக, திசுக்கள் மாற்று அறுவை சிகிச்சையும் அதிகரித்து வருவதாக திரு. பிரதாப்ராவ் ஜாதவ் கூறினார்.

>>>><<<<

பிரான்ஸ் நாட்டின் புதிய பிரதமராக திரு. **Francois Bayrou** நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரான்ஸில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டு, ஏற்கனவே இருந்த அரசு நீக்கப்பட்ட நிலையில், புதிய பிரதமராக திரு. **Francois Bayrou**-ஐ அந்நாட்டு அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன் நியமித்துள்ளார்.

அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்திற்கிடையே, நிலையான அரசை உருவாக்கும் பொறுப்பு புதிய பிரதமருக்கு உள்ளது.

இந்த ஆண்டின் 4வது பிரதமராக அவர் நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

யுக்ரைனின் எரிசக்தி அமைப்புகள் மீதும், பல்வேறு பகுதிகளிலும் ரஷ்ய படைகள் இன்று அதிகாலை ஏவுகணை தாக்குதலை நடத்தியதாக யுக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Andriii Sybiha** தெரிவித்துள்ளார்.

யுக்ரைனின் மின்சார கட்டமைப்புகளை குறி வைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலால், பல்வேறு பகுதிகளில் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டதால், பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக சமூகவலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள கட்டமைப்புகளின் மீது, தாங்கள் தாக்குதல் நடத்தவில்லை என்று ரஷ்யா மறுப்பு தெரிவித்துள்ளது.

>>>><<<<

கத்தார் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் **Arjun Erigaisi** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ரஷ்யாவின் **Andrey Esipenko** -வுடனான இறுதிச்சுற்று ஆட்டம் டிராவில் முடிந்ததை அடுத்து, அர்ஜூன் எரிகைஸி 7 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

>>>><<<<

உலக செஸ் சாம்பியன் போட்டியில் பட்டம் வென்ற குகேஷ்-க்கு, ஐந்து கோடி ரூபாய் பரிசுத் தொகையை மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>><<<<

உலக கோப்பை ஜூனியர் வாள்வீச்சு போட்டி பாங்காங்கில் இன்று தொடங்கியது.

நாளை மறுநாள் வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் ஏழு பேர் பங்கேற்றுள்ளனர்.

>>>><<<<

ஒடிசா மாஸ்ட்ர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rithvik Sanjeevi** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 4-21, 21-19, 21-13 என்ற செட்கணக்கில் சீனாவின் **Hu Zhe An**-ஐ வென்றார்.

**Shriyanshi Valishetty**,, **Tanvi Sharma**, **Tharun Mannepalli** ஆகியோரும் ஒற்றையர் பிரிவுகளில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் ரோஹன் கபூர் - **Ruthvika Shivani** இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

ஷோலாப்பூரில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli – Vaishnavi Adkar** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளை முன்னிட்டு, மும்பை அணியின் ஃபீல்டிங் பயிற்சியாளராக இங்கிலாந்தின் **Carl Hopkinson** நியமிக்கப்பட்டுள்ளார்.

**>>>>END<<<<**